படைப்பு
சமூகத்தின் இணைப்பு

உளி 8 | ஓசை 11 | மே 2025 | திங்களிதழ்

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
பிரபுசங்கர் க
ஷெண்பா
தி.கலையரசி

வடிவமைப்பு:
தேவம். ஆரோன்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024

admin@padaippu.com
+91 73388 97788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மகேஷ் சிபி ............................................04
லாஸ்யா ................................................05
சுசித்ரா மாரன் .......................................05
நிவேதிகா பொன்னுச்சாமி ......................06
தங்கேஸ் ..................................................07
இயலிசம் ................................................08
கு. பிரபாகரதாஸ் ...................................08
தங்கராஜ் பழநி .......................................09
கோவை. நா.கி.பிரசாத் ............................09
சாய் மீரா ................................................10
கௌ_ஆனந்தபிரபு ..................................11
ஆ.சார்லஸ் ..............................................12
பன்னீர்செல்வம் .....................................13
கண்ணன்_புலமி .....................................14
க. புனிதன் ..............................................14
ஜானகிகணேசன் .....................................15
கா.வெங்கடேஸ்வரன் .............................15
கோவை புதியவன் ..................................16
செ.வீரமணி .............................................16
பென்ஸ் பிரான்சிஸ் ...............................16
ராணி கஸ்தூரி .......................................17
ஞா. கலைச்செல்வி சென்னை ................18
நிஷா ராஜேஷ் .......................................19
பிரபுசங்கர்.க ..........................................20
தி.கலையரசி ..........................................21
ஆ.விஜயலெட்சுமி .................................22
கவியாசன் ..............................................22
மு.முபாரக் .............................................23
யாழ்முகில் .............................................23
நிலவை பார்த்திபன் ...............................24
கோ. சிவா தமிழ் ....................................25
ராம் .........................................................25
நயினார் ..................................................25
உமா மஹேஸ்வரி பால்ராஜ் .................26
யாழிசைசெல்வா ...................................27
மெஹராஜ்பேகம் ..................................28
தா.பிரபுபாரதி ........................................28
குபோதினி ..............................................28
கோ.லீலா ................................................29
ஆத்மாஜீவ் .............................................30
மகா செல்வம் .........................................31
வருணன் .................................................31
இரா.கீதாவாணி ......................................32
புகழேந்தி சரவணன் ..............................32
சுப்பு அழகேசன் .....................................32
அ. ராஜ்குமார் ........................................34
மீ. யூசுப் ஜாகிர் ......................................34
அ. சீனிவாசன் ........................................35
சுரேஷ் சூர்யா .........................................36
நேசன் .....................................................37
ஸ்ரீவாரி மஞ்சு .........................................37
ஐ.தர்மசிங் ...............................................38
கௌ. அஸ்வின் பிரபு .............................38
வினோத் பரமானந்தன் ...........................39
இரா. மதிராஜ் .........................................39
நேசன் மகதி ...........................................39



சில மரங்களின் கிளைகள்
முறிந்திருக்கின்றன
சில மரங்கள் திசை மாறி நிற்கின்றன
சில மரங்கள் வேரோடு
சாய்ந்து கிடக்கின்றன
சூறாவளி
கடந்து போன பின்பு வரும் தென்றல்
எல்லாவற்றையும்
சரி செய்துவிடுவதாய்
நம்பிக்கையளிக்கிறது
காயப்பட்ட மரங்களனைத்தையும்
ஊடுறுவுகிறது
இல்லை தழுவுகிறது
காற்றின் வகையறாக்களை
திட்டுவதா?
கொண்டாடுவதா?குழப்பத்-
திலிருக்கிறேன்
மீண்டும் தென்றல் வருகிறது
நான் எல்லாவற்றையும்
மறந்துவிடுகிறேன்

• மகேஷ் சிபி



பற்றி எரிகிற
தீ நுனிக்கூரில்
சொற்பல்
ஊதி அணைக்க
நாவாகி நீண்டு
கூரை தொடுகிறது
கையில் இல்லாத
நூல் வழிப் பரவுகிற
வெப்பம்
ஈர்ப்புவிசை மறந்த
மனம்
கால் மாற்றி நின்று
பதைபதைக்கிறது
ஆறுதல்
சொல்வதைப் போல்
எளிதானதல்ல
ஆறுதலடைதல்

• சுசித்ரா மாரன்

நான் உன்னை
நினைப்பதுமில்லை
மறப்பதுமில்லை
ஆனாலும்
நினைத்தலுக்கும்
மறத்தலுக்குமிடையிலான
சிறு பிழைப்பொழுதில்
தவறவிட்டிருக்கிறேன் உன்னை

• லாஸ்யா



மௌனங்கள் உதிர்த்து
விட்டுச் செல்லும்
அன்பின் வெளிப்பாடுகள்

கேட்பாரின்றி
கேவிக் கிடக்கிறது
தனிமையின் விளிம்புதனில்

மொழிபெயர்க்கப்படும்
இவ்வூமையின்
உரை மொழிகள்
ஏற்படுத்தும்
உள்ளக் கிளர்ச்சியின் முன்

பேரண்டத்தின்
பெருவெடிப்புகள் எல்லாம்
பொருளற்றே போய் விடுகின்றன

• நிவேதிகா பொன்னுச்சாமி

யாரும் இங்கு
ராமன் இல்லை
ஆனால்
எல்லோரும்
சீதையை
எதிர்பார்க்கிறார்கள்...!

• தனபாலன் தர்ஷன்.

இறுதி வரை உடன் வரப் போவது
உனது நினைவுகள் தான்
என்றிருந்தேன்
அதையும் நிறுத்திக் கொண்டாய்

வாடிப் போன பூச்செடியின்
ஆயுட் காலத்தை
ஒரு கடுங் கோடை வந்து
தீர்மானிப்பதைப் போல
காதலின் அந்திமத்தை
பிரிவுகளே தீர்மானிக்கின்றன

சருகுகள் போல தொடர்ந்து
நாம் உதிர்த்துக் கொண்டிருக்கும்
மூச்சுக்களில் ஒன்றை  எடுத்து
உள்ளங்கையில் வைத்து
முதலில் எந்தப் போவது யார்
நீயா நானா ?

• தங்கேஸ்





தையல் போட்ட இடத்தில் வலி
இன்னும் மீதம் இருக்கிறது.
காய்ந்த தொப்புள் கொடி
அலமாரியில் பத்திரமாக இருக்கிறது.
அறுத்துக் கொண்டு போன
தாலிக்கொடி அடமானத்தில் மூழ்கிப்
போய் இருக்கிறது.
அவமானமாகவே இல்லை.
என்னை
அனாதை இல்லத்தில் விட்டுப்
போகும்போதும் என் மகன் முகம்
சிரிப்போடு இருக்கிறது.

• இயலிசம்

காணாமல் போய்விட்டன
நதியில் விழுந்த
மழைத்துளிகள்...

• கு. பிரபாகரதாஸ்



உரையாடலின் இடையே
நுழைந்த போது
உனக்கு ஆயுசு நூறு என்றார்கள்.
என்னைப் பற்றி அவர்கள்
என்ன பேசியிருப்பார்கள்
என்கிற ஆராய்ச்சியில்
கழிந்துகொண்டிருக்கிறது
என் ஆயுசு...!

• தங்கராஜ் பழநி

சுமை தூக்கும் தொழிலாளி
பாரம் தெரியவில்லை!
இதயத்தில் குடும்பம்!

• கோவை. நா.கி.பிரசாத்

இந்த பழுத்த வெய்யில்
பரவாயில்லை

தலைக்கு நேர்எதிராய்
அவன் தன்
மொத்த உக்கிரத்தையும்
அபிடேகித்துக்கொண்டிருக்கிற
நடுப்பகல்

பச்சை விளக்குக்காக
பரிதவிக்கிற மனதைத் தாண்டி
விழிகள் ஓட

பைக்கின் பின்னிருக்கையில்
பதின்பருவ மகனுக்காக தன்
ஹெல்மெட்டை
கழற்றித் தருகிறார் ஒரு அப்பா

அம்மா வெயிலில் நுழையாத படி
கொஞ்சம் குடையை
உயர்த்திப் பிடிக்கிறாள்
ஒரு மகள்

வெயிலோடு வாழ்க்கைப் படும்
தினசரி வேலையொன்றை
கைக்கொண்ட கணவன்
நிழல் தேடி வண்டியை
ஓரங்கட்டுகிறான் மனைவிக்காக

நானும் அமர்ந்திருக்கிறேன்
முன்னிருந்து அப்பா
தன்னுடைய குளிர் கண்ணாடியை
எனக்குத் தருகிறார்

இந்த பழுத்த வெய்யில்
கொஞ்சம் பரவாயில்லை
தான்



• சாய் மீரா

## சுய தரிசனம்

குறுவாளையும் மயிற்பீலியையும்
இரகசியமாய் வைத்திருக்கிறேன் நண்பர்களே.
துயரத்தாலும் துரோகத்தாலும்
குத்து பட்டு இளைப்பாறல் வேண்டி
என்னிடம் வருவீர்களே
அந்த நொடிக்காகவே வைத்திருக்கிறேன்.
அப்படித்தான் நான் உங்களைத்தேடி வந்தேன்.
உடைந்த மனச்சில்லுகளை
கையோடு அள்ளி வருகையில்
அன்பின் சரணாலயம் இதுதானென
கட்டியணைத்தீர்கள்.
அந்த இரவில் என்னால் உறங்க முடியவில்லை.
சிறுதும் பெரிதுமான நகம் கீறிய ரணங்களாலும்
கூரிய முனைகொண்டு முதுகைக் கீறிய
காயங்களிலான அந்த இரவில் உறங்க
முடியவில்லை.
அன்பின் மிகுதியால்
நகங்கள் பிராண்டியிருக்குமென்றும்
கவனக்குறைவாக
வைத்திருந்த கத்தியினால் ஆன காயங்களெனவும்
நான் நம்பிக்கொண்டேன்.
அதன் பிறகான சந்திப்புகளில்
அலைபாயும் கண்களோடும்
இகழ்ச்சியான சிரிப்போடும்
முலாமிட்ட சொற்களோடும்
என் காயத்தை விசாரிக்கையில்தான்
நானும் பட்டறைக்கு போக நேர்ந்தது.
எனக்கு முன்பாகவே நீங்கள் வாங்கிப்போனதை
அந்தக் கொல்லன் தான் சொன்னான்.
ஆழமற்ற காயங்களை ஏற்படுத்தும்
கத்தியைத்தான் வாங்கியிருக்கிறேன்.
இன்னும் சொல்லப்போனால்
என்னிடம் குறுவாளுண்டு என்பதை நீங்கள்
தெரிந்து கொண்டால் போதுமானது.
கத்தியை வாங்கும் அனைவருக்கும்
மயிலிறகை இலவசமாக அவனே தான் தருகிறான்.
இதோ மனமுடைந்து கசியும் விழிகளோடு




என்னைப்போலவே நீங்களும் வருகிறீர்கள்.
விம்மலும் ஆற்றாமையுமாக
இறுக அணைத்துக்கொள்கிறீர்கள்.
இப்போது உங்களிடம் ஆயுதமில்லை.
கரங்களின் மிக நெருக்கத்தில்தான்
உங்கள் முதுகு இருக்கிறது.
என்னிடம் குறுவாளும் மயிற்பீலியுமிருக்கிறது.

• கௌ_ஆனந்தபிரபு

## பாவமன்னிப்பு

மரங்களை வெட்டி
வியாபாரம் செய்வோருக்கும் சேர்த்தே
பொழிகிறது,
மழை.

மழை
பாவம் மன்னிக்கும்,
மழையாகிறது.

கடவுள்களை
வணிக முதலீடாகக் கொண்டு,
மக்களின்
தெய்வ நம்பிக்கையை,
காசாக்கும் சாமியார்கள் பிறகு
கடவுள்களிடம் கேட்டடுவிடுகின்றனர்,
பாவமன்னிப்பு.

ஆறுகளின் போக்கை
மடைமாற்றியவர்களை,
ஆறுகள்
பெரு வெள்ள பாதிப்பால்
காட்டிக் கொடுத்துவிடுகின்றன,
மழைக் காலங்களில்.

துயறுவோர்களையும்
புன்னகைக்க வைத்திடுகிறது,
அவர்களின் முகங்களில்
கோலமிடும்,
சில்லென்ற சாரல் மழை.



• ஆ.சார்லஸ்

## பேசினால் பாரம் குறையும்.....

அந்தப் பாதை வெறிச்சோடி கிடந்தது.....
அங்கிருந்த சுவாரசியங்களை யாரோ பிடுங்கி
போட்டது போன்று இருந்தது.....

சோகங்களை பேசி
செல்வதற்காக மட்டுமே பயன்படுத்தும்
பாதை போன்று எப்போதாவது
தனக்குத்தானே பேசிக்கொண்டு சிலர் சென்று
கொண்டிருந்தார்கள்......

திடீரென்று அனற்காற்று வீசும்
பூக்கள் பூப்பது தடை செய்யப்பட்டு இருக்கிறது
என்ற வாசகம் தாங்கிய
பலகையை யாரோ வைத்திருந்தார்கள்.....

எக்காளமிடும் குயில் இசைகள்
அன்றைய நாளில் அறவே இல்லாமல்
இருந்தது....



விழுந்த இளநீர் ஒன்றில் இருந்து
வடியும் நீரை தாகத்துடன் பார்த்துக்
கொண்டிருந்தது ஆமணக்கு மரத்தில்
இருக்கும்
இரட்டைவால் குருவி....

மழை பொய்த்த
வானத்தின் கீழே குடை பிடித்து சென்று
கொண்டிருந்தனர் சிலர்.... வெயிலிலும்
மழையிலும் நனைய விரும்பாதவர்கள்.....

நான் இப்போது
அந்த பாதையில் செல்ல வேண்டும்....
தற்சமயம் என்னோடு பேசிக்கொண்டு
வருவதற்கு யாராவது இருக்கிறீர்களா.....

• பன்னீர்செல்வம்



புத்தனின் வீடு
வெள்ளம் வடிந்த
சுவரில் பாசியின் வண்ணம்
புத்தனின் வீடு
பாசிகளால் நிரம்பி இருந்தது
பேய் காற்று சூறாவளி அடித்த
இடத்தில் பூஞ் செடிகள்
வளர்ந்திருந்தன
போர் நடந்த இடத்தில்
எறும்புகளுக்கு வைத்தியம்
பார்த்திருந்தார் டாக்டர்
காணாது போன
வனத்தில் இருந்து வந்த சிறுவன்
யானை டாக்டர் ஆனான்
பசி களத்தில் வளர்ந்து வந்தவன்
ஊட்ட சத்து நிபுணன் ஆனான்
துவரைச் சிமிரில்
வண்ணத்தில் நனைத்து
சுவரில் ஒற்றியவன்
பெரிய ஓவியன் ஆனான்
மழையில்  வளர்ந்த
செம்மண் தொட்டிச் செடி
தானாகவே தனக்கான கவிதையை
எழுதிக் கொண்டது
தனக்கான விருப்பத்தை தானே
தேர்வு செய்தலே
வாழ்க்கை

• க. புனிதன்

வனமே சருகு
சருகே வனம்
இந்தப் பார்வை
கிட்டும் முன்னே
என் பார்வை
தட்டும் என அறியேன்..

• கண்ணன்_புலமி



ஓர்யுகம் முடிந்த பொழுதில்
கண்ணீர்மழையில்
இரவு குளித்த மௌனம்
கனத்த கணத்தில்
நீவந்து கதவுதட்டினாய்..!

வெடவெடக்கும் குளிரையும்
மூக்குத்தி வெளிச்சத்தையும்
கொண்டு வந்ததால்
இருள் களைந்தது அறை..!

இரவு வானின்
நிலவு தேவதையே
என் வாசல் வந்ததாய்
மகிழ்ந்தேன்..!

கருப்பு வெள்ளையின்
காவியத் தலைவர்களாய்
கலக்கிய
இரு கோப்பைத் தேநீர்
கொண்டு வந்தேன்..!

இறந்தகாலமும் நிகழ்காலமும்
எதிரெதிரே இருப்பதுபோல,,
நீயும் நானும் அமர்ந்திருக்க..!

என் கோப்பை விளிம்பின்வழியே
எதிர்காலம் தெரிந்தது
சுழல்கோடுகளாய்..!

நெளிந்து பறந்தது ஆவி
உன் கோப்பையிலிருந்தும்
உன் விழிகளிலிருந்தும்..!!

• ஜானகிகணேசன்.

கோடையை............
குளிர்விக்க வேண்டி
பெருமழைக்கு தவம் கிடக்கிறேன்
பேருகால வலியோடு
பிரசவ அறைக்குள்
அனுமதிக்கப்படுகிறாய் நீ
இப்போது என்னோடு சேர்ந்து
வெயிலும்
நனைந்துகொண்டிருக்கிறது.

• கா.வெங்கடேஸ்வரன்.

சாலை விரிவாக்கம்
கிலியில் நடுங்கின
புளியமரத்து பேய்கள்

• கோவை புதியவன்



காடுகளை துறந்தபின்
ஆயுதங்களை
தயாரித்தோம்

கூடி வாழத்தொடங்கியதும்
வன்மங்களை
கூர் தீட்டினோம்

பேசத்தொடங்கிய பிறகு
பேதங்களை
வளர்த்துக்கொண்டோம்

எழுதப்படிக்க
தெரிந்து கொண்டதும்
சாதி.யால் மத.த்தால்
மனிதர்களை
பிரித்து வைத்தோம்

அனைத்தையும்
கற்றுத்தேர்ந்த பிறகு
மிருகங்களைப்போல்
ஒருவரோடு ஒருவர்
போரிட்டு மடிகிறோம்

காடுகளில்
மலைகளில்
வசித்தபோது மட்டுமே
நாங்கள்
மனிதர்களாக இருந்தோம்

• செ.வீரமணி

எந்தக் கடல் நீரும்
உப்புக் கரிப்பதில்லை
மழையாக மாறும்போது....

• பென்ஸ் பிரான்சிஸ்

## கரையாத சொல்


ஒரு உரையாடலின் போது
சொல்லிவிடுகிறேன் அம்மாவிற்கு
எழுபத்திஐந்து வயது என்றும்
கொஞ்சம் ஓய்விலிருக்கிறார் என்றும்

அந்த வார்த்தை
அப்படியே காற்றில் கரைந்திருக்கலாம்
மாறாக அம்மா காதில் விழுந்துவிட்டது..

நேற்றிலிருந்து அம்மா சிறு
பிள்ளை போல் ஓடியாடி ஏதாவது
செய்துகொண்டும்
பேசிக்கொண்டும் இருக்கிறாள்.

காலத்திற்கு கணக்கு வைத்தது என்
தவறுதான்..

• கலைச்செல்வி



## நறுமணத்தின் அவதானம்..

மல்லீப்பூ...ரோஜாப்பூ...
முல்லை..சம்பங்கியென
பூக்காரப்பெண்மணி தெருவில்
சத்தமிட்டபடி
நடந்து கொண்டிருந்தார்...
கலவையான பூக்களின் நறுமணம்
அவருக்கு முன் நடந்து கொண்டிருந்தது...
அவர் வேகமாய்க்
கடந்து கொண்டிருந்தார்...
நறுமணம் மனிதர்களை அவதானித்தபடி
கொஞ்சம் நிதானமாகத்தான்
நடந்து கொண்டிருந்தது...

• ராணி கஸ்தூரி

சாப்பிட்டியா எனக்
கேட்கக் கூட
நேரமில்லாத உன்னிடமா
எனதன்பைக் கொட்டினேன்?

நலம் விசாரிக்க
ஒரு குறுஞ்செய்தி
அனுப்ப மறந்த
உன்னையா உலகமென
வலம் வந்தேன் ?

இனி உனக்கான
காத்திருப்பு வீணென
எண்ணிடவா ?

இத்தகை காத்திருத்தல்
போகட்டும் என் செய்திக்கு
பதிலளிக்க தயங்கும்
உன்மேலா இத்தனை
பைத்தியமாக இருந்தேன் ?

உனக்கே தோணும்வரை
என்கைபேசி இலக்கத்தை
அப்படியே வைத்துக்கொள்

ஒருபிரிவு நிகழவேண்டும்
மணம்வீசும் எனத்
தெரிந்தும் நிராகரிக்கப்படும்
மல்லிகை போல்
நம்மிருவரையும்
உரசிச் செல்லும்
தென்றல் போல
இப்படி நிகழவேண்டும்
நம்பிரிவு எவ்வித
ஆர்ப்பாட்ட அழுகையின்றி !!!!!



• ஞா. கலைச்செல்வி சென்னை

என் மௌன தேசத்தின்
கொடுங்கோல் அரசனோ
நீ..

கொடுங் கொடுங்குளிரிலும்
கடுங் கோடையென
என் தூவான மேகத்தை
நீ களைய!

நின் விழி வெம்மையில்
எனை வேய்கிறாய்
உன் வெற்று வனத்தின்
மேல் கூரையாய்.

உன் பிரிய விருந்தோம்பலில்
திளைத்த யென்
மென் மனதில்.

கொட்டும் குளவியதின்
கொடுக்கென
கொட்டிச் செல்லும்
நீ அறியாயோ!

அனலென வாட்டும்
உன் சொற் கூட்டுக்குள்
வறண்ட  நாவாய்
தவித்து தகித்து என் மனம்
பிறழ்வதறியாது.

விழி நான்கும் தீண்ட
இருவர் விரல்கள்
பற்றித் ததும்பி நிறைந்த
காதல் கனிரச



கோப்பையோ.
வார்த்தை போரின்
இறுதி அத்தியாயத்தின்
விம்மியெழுந்த வீரியத்தில்
கீறலிடுவதறியாது!

வண்டிக் குப்பையை
மென்மேலும் சேகரித்து
நிரப்புகிறது தன்
ஆழ்மன சேமிப்புக்
கிடங்கில்....

• நிஷா ராஜேஷ்



## வா வா என் தேவதையே

அப்பாவின் நிழலாக
அவர் எங்கு சென்றாலும்
எப்போதும் அவருடனே
சுற்றிக் கொண்டிருந்த மகள்
பருவமடைந்த இரண்டாம் நாள்
அப்பாவை தேடுகிறாள்
அவர் ஸ்பரிசத்திற்கு ஏங்குகிறாள்
வேலைப்பளுவில்
மகிழ்ச்சியின் உச்சத்தில்
சமூக கோட்பாடுகளில்
அருகில் வர மறந்த அப்பா
சற்று தாமதமாக
இதை உணர்கிறார்
நான்காம் நாள் காலை
கோடை மழை போல
மகள் பூமியை
அணைத்துக் கொள்கிறது
“அப்பா மழை”
வாசல் வந்து பார்த்தால்
திட்டு திட்டாக
ஈர ஓவியங்கள்....

• பிரபுசங்கர்.க

நான் குழந்தையாக இருந்தபோது
அம்மா
எனக்கு மட்டும்தான் அம்மாவென
நினைத்திருந்தேன்

கொஞ்சம் வளர்ந்த பிறகு
என் தோழிகளுக்கும் அம்மாவாக
அவளைப் பார்க்க முடிந்தது
திருமணமாகி குழந்தை பெற்றப்பிறகு
என் குழந்தைக்கும்
அம்மாவாக மாறி இருந்தாள்

வயது தளர்ந்தாலும்
அப்பாவுக்கும் சேர்த்து அம்மாவாக
விளங்கத் தவறவில்லை
அம்மாக்களை இழந்த உறவுகளுக்கும்
தலைசாய மடி தந்து அணைக்கிறாள்

அதுமட்டுமின்றி
மொட்டை மாடியில்
அணில்களையும் காகங்களையும்
வீதியில் திரியும்
நாய்களையும் மாடுகளையும்
குழந்தைகளாக வரித்துக் கொண்டிருக்கிறாள்

இப்போது புரிகிறது
அம்மா என்பது உறவின் ஸ்தானம் அல்ல
அம்மா என்றால்
அன்பின் ஆதியூற்று...
பல்கிப் பெருகும் விருட்சம்...
வானத்தை வளர்க்கும் விதை...

• தி.கலையரசி





எனைக் கொன்றுதான்
என்னில் சிறைபட்ட
உன் அன்பை விடுதலை
செய்ய முடியும்...

உச்சி வெயிலில்
பிச்சைக்கு அலையும்
காலுடைந்த யாசகனாய்
உன் காதலின் காலடியில்
காத்திருக்கிறது
என் நெடிதுயர்ந்த
ஏக்கம்...

நீடித்திடும் பாசப்புனலில் மிஞ்சும்
உனை கெஞ்சிக் கிடக்கிறது
பித்தத்தில் முத்திக் கிடக்கும் என்
காதல்...

பேரன்பின் பிரியங்கள்
ஒன்று விலகினாலும் ஒன்று
விடுவதில்லை
விரட்டி விரட்டி அன்பைப்
புகட்டுவதுதானே நேசங்களின்
சரித்திரங்கள்!

தொலைத்து விட்டு வெற்றாய்
அலைவதை விட பிடித்து வைத்து
தன்னையே தொலைக்கிறது இந்த
கசிந்துருகும் காதல்.

• ஆ.விஜயலெட்சுமி

உலகையே ஆள்கிறாள்
அன்று தப்பிப் பிழைத்தவள்
கள்ளிச் செடியிடம்

• கவியாசன்.



செடிகளுக்கு
துணையாய் பூக்களிருக்கின்றன,
மரங்களுக்கு
துணையாய் பறவைகள்
இருக்கின்றன...
வானத்திற்கு
துணையாய்
நட்சத்திரங்களிருக்கின்றன,
நதிகளுகளுக்கு
துணையாய்
மீன்களிருக்கின்றன...
வசிக்க இடமில்லாமல்
சாலையோரங்களில் வசிக்கும்
மனிதர்களுக்கு
துணையாய் யார் இருக்கிறார்கள்...
என்றோ ஒரு நாள் வீசிய ரொட்டித் துண்டை
உண்ட நாயைத் தவிர!

• மு.முபாரக்

## ஆறும் ஐந்தும்...

மரங்களை
வெட்டி சாய்த்தனர்
மனிதர்கள்.

மரங்களை
நட்டு வளர்த்தன.
எச்சம் வழி
பறவைகள்!

• யாழ்முகில்.



மற்ற சிலரைப்போல
மௌனமாகக் கடந்து சென்றிருக்கலாம்

அல்லது
வேறு பக்கம் பார்வை திருப்பி
வேகமாக நடந்து சென்றிருக்கலாம்

ஓரிருவர் உதவுவதை
ஓரக்கண்ணால் பார்த்தபடி
ஒதுங்கிப் போயிருக்கலாம்

அல்லது இரக்கப் பார்வையுடன்
இறைவா காப்பாற்று என்றபடி
இடத்தையாவது
காலி செய்திருக்கலாம்

இழிவுகள் நிரம்பிய
இதயத்தின் பாரத்தை
இதற்கு மேலும் தாங்க இயலாமல்
இப்படித்தான் புலம்பித் தவிக்கிறேன்
இரண்டொரு நாள்களாக

அதிலும் குறிப்பாக

பாதி கிழிந்த பணத்தாள் ஒன்றை
பார்வையற்ற அந்த யாசகனிடம்
கருணையின்றி கையளித்த
நாளிலிருந்து....

• நிலவை பார்த்திபன்



தரையிறங்கியது பறவை
நின்று ஓய்வெடுக்கிறது
தோதாக வானம்

வாழும் இரவோடு
ஆடும் பார்வைகள்
தூங்காமல் தார்ச்சாலை

மறைந்துபோன குளத்தில்
மிதக்கிறது புதுச்சாலை
நீந்தி இறந்தது தவளை

வானம் மல்லாந்து கிடக்கிறது
கால் வைத்ததும்
தளும்புகிறது மேகம்

• நயினார்

கிளைக் கைகளால்
தலையைத் தொட்டு
ஆசிர்வதிக்கின்றது
நட்டு வைத்த மரம்.

• கோ. சிவா தமிழ்.

கோவில் திருவிழா
தலைதூக்கி ஆடுகிறது
சாதிக் கொடிகள்.

• ராம்.



ஒரு கைவிடுதல்
நிகழும்போது தான்
மிகச்சரியாக இன்னொரு
உறவு அருகே வருகிறது

வார்த்தைகளை
எத்தனை கவனமாகக்
கையாளும்போதும்
ஏதோவொரு கீறல்

இயல்பாக பேசும்மொழி
எப்போது தடுமாறுகிறதோ
அங்கே ஒரு அச்சஉணர்வு
தலைதூக்கி விடுகிறது

சகலத்தையும் ஒருபாடாய்
உதறியெழும் மனம் தான்
கூப்பாடு போடுகிறது
யாருமற்று உன்னால்
வாழமுடியாதா என்ன...

சிரித்துக்கொண்டே
பதில் சொல்லி வைக்கிறேன்
எல்லோரும் இருக்கிறார்கள்
என்று நான் மட்டும் தானே
நம்பிக்கொண்டிருக்கிறேன்..

• உமா மஹேஸ்வரி பால்ராஜ்



இன்னும் புலராத
கனவுகளோடு காத்திருந்த
நாட்களின் ஞாபகங்கள்
என்னைத் தீண்டுகின்றன!

இருளின் கடைசி இலையை
துடைக்கும் முயற்சியில்
கீழ் வானில் மகரந்தப் பொடியை
வானில் சிதறவிட்டு
மலர்ந்த ஞாயிறின்
கரம் பற்றும் துடிப்பில்
எழுந்து சென்ற நீ
கால் சலங்கை குலுங்க
கடற்கரை மணலில்
உனது பாதம் வரைந்த
ஓவியத்தை சுற்றி மணல்வேலி அமைத்து
பிறவிப் பயன் பெற்ற
மிதப்பில் சிரிக்கும்
காதல் கிறுக்கனை மறந்து விட்டாய்!

செலவான காசாக உழன்றவனின் வாழ்வில்
புதிதாகச் சேர்ந்த
ஒற்றை நோட்டின் வாசத்தில்
துடிக்க மறந்த இதயத்திற்கு
தொடக்கப் புள்ளி கொடுத்து
அலை அலையாய் பரவி
புன்னகையில் பூப்பறிக்க புறப்பட்டு
உனக்கே தெரியாமல்
இதயத்தைக் கைப்பற்றிய நாட்களில் தானடி
எனது முகவரி தெரிந்து கொண்டேன்!

- யாழிசைசெல்வா

கோபமும் பிடிவாதமும்
எழ ஆரம்பித்திருக்கிறது...
அடடா ....
இப்பொழுதுதான்
காதல் சூடு
பிடித்திருக்கிறது போல

• மெஹராஜ்பேகம்




விடுமுறை நாள்
குடும்பத்திற்காக உழைக்கிறான்
சுண்டல் விற்கும் சிறுவன்.

• தா.பிரபுபாரதி.

மௌனம் சுமப்பவர்கள்
குற்றவாளிகளாகவும்
குற்றங்களை சுமத்தி
பொய்களைத்திரும்பத்திரும்பச்
சொல்லி
சத்தமாய் பேசுபவர்கள்
நிரபராதிகளாகவுமே
உலகம் நம்பிக்கொள்கிறது
வாசல்களில் நின்று
நிரூபித்தே வாழப்பழகாத பலர்
மௌனமாய் கடந்துபோகிறார்கள்
மௌனம் சம்மதம் இல்லை
சிலநேரங்களில்
வார்த்தைகள் ஸ்தம்பித்து
உங்களிடம் பேசிப்பயனில்லை என்ற
வெறுமையில் வந்ததாகவும்
இருக்கலாம்
மௌனம்...

• குபோதினி



தேயிலை தோட்டங்களில்
புகைப்படம் எடுக்கும் நீங்கள்
அட்டை கடித்தால்
புது ரத்தம் வருமென
சொல்லிக்கொண்டே
அட்டைக் கடித்ததும்
பதறுகிறீர்கள்.

எப்போதும் போல்
புகையிலை சுண்ணாம்பு
தீப்பெட்டியின் ஓரக்கிழிசல்
மூக்குப்பொடி மருத்துவம்
தருகிறோம்.

மீண்டும் கேட்கிறீர்கள்
புது இரத்தம் வரும்தானே.

ரத்தமற்ற எங்களின்
கால்களில் ரத்தம்
உறிஞ்சும் அட்டைகளை
உங்களுக்குத் தெரியுமா?

கால்களை அட்டைகளுக்கு கொடுத்துவிட்டு...
குளிர் குறையாத அதிகாலையில்
வெளிறிய விரல் வழியே
எஞ்சிய எங்கள் ரத்தத்தை
தேயிலைகளில் பாய்ச்சி
பறிக்கின்றோம்.

ஆவி பறக்கும் தேநீரின் சூடு
ஒவ்வொரு அதிகாலையிலும்
குளிரில் நாங்கள் தவறவிட்ட
சூரியனின் வெப்பமது.

குளிர்ந்த தேநீரின் குளிர்ச்சி
தன்னையிழந்த காடுகளின்
ஓயாத கண்ணீரின் ஈரம்.

உறிஞ்சலின் மெல்லிய ஒலியில்
ஒலிப்பது தொலைந்துப்போன
சிறுத்தையின் சிறு செருமல்.

நீங்கள் ரசிக்கும் தேயிலை
தோட்டத்தின் நிறம் சிவப்பு
சுவையில் மறைந்திருப்பது
தீராத கண்ணீரின் உப்பு

மீண்டும் கேட்கிறீர்கள்
புது இரத்தம் வரும்தானே...
ஆம் ! வரும் அது அட்டை
உறிஞ்சிய எங்களின் பச்சை
ரத்தமாகவும் இருக்கலாம்.

• கோ.லீலா



## சுவாதீனம்

இனி
நிம்மதியாய் இறக்கலாம்.

விழித்திருக்கும்போதே
இறந்து போவதுதான்
ஒரு பட்டாம்பூச்சிக்கு
அழகு.

வானம்
தெளிவாய் இருக்கிறது.

கடல்
மிக அமைதியாய் இருக்கிறது.

புத்தகங்கள்
மௌனமாய்
பேசிக் கொண்டிருக்கின்றன.

சாதிப்பதற்கான
சடங்குகள் ஏதுமற்றவனிடம்
ஒரு புல்லாங்குழல் இருக்கிறது.

விழிகள்
திறந்திருக்கும்போதே

காட்சிகள்
தெளிவாய் காணும்போதே

ஒரு புன்னகை
மிச்சமிருக்கும் போதே

கடைசியாய்
ஒரு கவிதையின் ஸ்பரிசம்
தழுவிக் கொண்டிருக்கும் போதே.

நிகழும் மூச்சை
சுவாதீனமாய்
கடைசியாய்...

• ஆத்மாஜீவ்



நீங்கள் என் கைகளில்
வலுக்கட்டாயமாக திணிக்கும்
உங்கள் அதீதத்தின்
பெருங்கனம் தாளாமல் கைத்தவறி
கீழே விட்டு விடுகிறேன் நான்!

இதைக் கூட
தக்க வைத்துக் கொள்ளத்
தெரியவில்லையே?
என்ற குற்ற உணர்வுக்குள்ளாக்கி என்
கையாலாகத் தன்மையை
உணர வைக்கிறீரென்னை ?

கொள்ளளவை எட்டிய பின்னும்
கொட்டித் தீர்க்கும் பெருமழையின்
அழுத்தம் தாளாது உடைப்பெடுத்து
ஓடும் அணையின்
மதகின் மேல்
குற்றஞ்சாட்டுவீர்களா நீங்கள் ?

வேண்டும் பொழுது
வேண்டிய அளவு
எடுத்துக் கொள்ளும் வல்லமை
என் கைகளுக்கும் உண்டு ....
என்பதை எப்போது
உணரப்போகிறீர்கள் நீங்கள்?

• மகா செல்வம்

## முதலடி

உண்மையின்
ஒரு நுனி
உங்கள் கைகளிலும்
இன்னொரு நுனி
எந்தன் கரங்களிலும்
இருக்கின்றது.
இடையில் தான் இருக்கிறது
முழு உண்மையின்
இடியாப்பச் சிக்கல்.
அறிவதைக் காட்டிலும்
முக்கியமானது
உள்ளதெனத் தெளிவது.

• வருணன்



எங்கோ கூவும் குயில் உன்னை
தான் அருகில் நிறுத்துகிறது.
எட்டி பூத்திருக்கும் ஒற்றைரோஜா உன்
சாயலில் தலை திருப்பிக்கொள்கிறது.

தொலைவாகவே இருக்கிறாய் இன்னும்
நெருங்கிவர பிரியப்படவில்லை.
ஏதோ ஆற்றாமையில் தீக்குளித்துக்
கொள்கிறேன். வேறொரு
சேதமுமில்லை.

உன் ஆட்காட்டி விரல் நீவிட என்
பெருந்துயரை சிறு புருவங்களின்
இடுக்கில் புதைத்திருக்கின்றேன்.
வருடிடும் வாய்ப்புள்ள நாள்
வருமோ.!?

நீ நீயாகவே இரு.  உன்னை சூழ்ச்சி
தூண்டில் மாட்டி என் பிரியமென
கண்ணாடி குடுவைக்குள் இட்டு
கொண்டு கொக்கரிக்கமாட்டேன்.

நான் நானாகவும் நீ நீயாகவும்
காதல் காதலாயும் வாழமுடியாத
போது சேர்ந்திருந்தால் என்ன..!?
பிரிந்திருந்தாலென்ன என் பிரியமே..?

இயலாமை உறுமும் நேரம்
இருவிழியும் கலக்கமுற உன்
நினைப்பை அணைத்தப்படி ஒத்திகை
பார்க்கும் மனம் கல்லறைக்குள்.

தனிமை தீ.

• இரா.கீதாவாணி



நேர்த்தியாய் வளர்க்கப்பட்ட
மரத்தின் சாயல்
என்னுள் தேடாதீர்கள் ஏமாற்றம்
நேரிடலாம்
காட்டாற்று வெள்ளத்தில் எங்கோ
பிரசவித்து
ஏதோவோர் இடத்தில் காலூன்றி
முளைத்து கரடு முரடான
பாதையில்
முட்களோடு ஒழுங்கற்ற
அழகியல் சூழ்ந்த
கானகத்தில் படரும்
கொடியாகவோ
அடர்ந்த கிளைகளோடு மிரட்டும்
விருட்சமாகவோ
நான் வளர்ந்திருக்கலாம்
என்னை
அப்படியே ஏற்க முடியுமாயின்
ஏற்றுக் கொள்ளுங்கள்.

• தூரிகை

ஜன்னலுக்குள் நின்று பார்த்தேன்
சதுரத்துக்குள் பெய்தமழை
எனக்கானதாய் தோன்றியது.!

வெளியே வந்து
நனைந்து வான் பார்த்தேன்
உலகின் எல்லைகள்
அனைத்தையும் கோர்த்து ஒரு
வட்டத்துக்குள் பெய்தது...

வை! யாவருக்கும் பொதுவில்
இதயம்.!

• புகழேந்தி சரவணன்

## என்ன செய்ய

உன்னைப் பார்க்காது
உன்னோடு பேசாது
உன் பெயரைச் சொல்லாது
இருக்கப் பழகி விட்டேன்
ஆனால்..
அலைபேசி அடிக்கும் போதெல்லாம்
வருகின்ற
உன் நினைவுகளை
என்ன செய்ய...!

• சுப்பு அழகேசன்



உயர் மலைத் தொடரில்
உன் பெயர்
எழுதி வந்திருக்கிறேன்
உரத்து வாசிக்கக் கூடும்
அவைகள்
தீராப் பிரியங்களின்
சொற்களில்
உறைந்து கிடக்கிறதென் காதல்....

அவனிடமும்
சொல்லாதீர்களென
அதட்டி விட்டே
தீவனமிட்டு வந்திருக்கிறேன்
வெள்ளை மலைகளின்
புறாக்களுக்கு
சிலுவை ஏந்தியவனின்
நினைவு நாளின்று....

• அ.ராஜ்குமார்

அத்தனை வெயிலையும்.,
அத்தனை குப்பைகளையும்.,
அத்தனை கழிவுகளையும்..,
ஒரே நாளில் விடாமல் பெய்த
மழை மொத்தமாய்
சுத்தம் செய்து
ஆசுவாசப்படுத்தி
விடுகிறது.,
அத்தனை நினைவுகளையும்
அழித்துப்போகும் ஒரு
மழை இதயத்தில்
எப்போது பொழியுமென்று தான்
திரண்டு நிற்கிறது
அன்பின் மேகங்கள்..!!!

• மீ. யூசுப் ஜாகிர்



## முடிச்சுகள்

குறைந்தபட்சம் நாற்பத்தைந்து பொருட்கள்
கொண்ட மளிகைப் பட்டியலை
ஒருநாளும் காகிதத்தில்
எழுதி பழகாதவள்.

திருமணங்களில் இருபத்து ஒன்று
சீர்வரிசைகள்
பிழையாமல் மனப்பாடம் செய்தவள்.

கோவிலில் அபிஷேகப் பொருட்கள்
\என்னென்ன என்று
பூசாரிக்கே வரிசையாக
ஞாபகப்படுத்தக்கூடியவள்.

இப்போதெல்லாம்
ஒன்றிரண்டு விஷயங்களை
கவனத்தில் கொள்ள
புடவைத்தலைப்பில்
முடிச்சுப் போடுகிறாள்.

சில சமயங்களில்
எதற்காக முடிச்சுப் போட்டாள் என்பதை
அவளே மறந்துவிடுகிறாள்.

மகள் கடைசியாக ஊருக்கு வந்து
எத்தனை நாட்கள் ஆனது என்பதை மட்டும்
எந்த முடிச்சும் போடாமல்
துல்லியமாகக் கூறுகிறாள்.

• அ.சீனிவாசன்



## தேநீர் நாள்

சூடான தேநீரில்
ஆடை படர்தருணம் போல
நாமிருவரும்
அந்த அந்தியின்
சந்திப்பில்

அன்பின் சொல்லுச்சம்
மச்சி ஒரு "டீ" சொல்

ஒரு நதியின்
ஒரு மழையின்
துவக்கம்
முதல் துளி
தேநீர்

காதலின்
மீச்சிறு அழகு
தேநீருக்கு இடையில்
முத்தமிட்டுக்கொள்வது

ஒரு வெண்மை நிற
பட்டாம்பூச்சியாகி
சுற்றி சுற்றி பறக்கிறது
சமாதானத்திற்கு
ஊடாக
பகிரப்படும்
தேநீர்

ஒரு தேநீராக
யாரோ ஒருவருக்காக பிறந்து
அவருக்காகவே மடிந்து
அளவும்
அழகுமாய்
அவ்விதம் ஒரு வாழ்வுவேண்டும்
அடுத்த பிறப்பில்.

• சுரேஷ் சூர்யா

திறந்தே இருக்கும் விழியில்
சித்திரையின் அனல் ....

பெருத்த பசியில்
வெறித்துகிடக்கும்
தனிமை....

மெதுவாக விழிகளை உருட்டுகிறார்
அய்யனார்...

முனையுடைந்த அருவா..
தோலுரிந்த ஆடை..
வீரமிழந்த மீசை...
நொண்டிகால் குதிரை...

பரிதாப பரிவாரத்தை
வாஞ்சையாய்
தழுவ
மடங்கிய விரல்களை நீட்டுகிறார்
ஒவ்வொன்றாய் உதிர்கிறது...
பெருத்த வயிறு
இரண்டாய் பிளந்து
பசியடங்கிப் போனார்
அய்யனார்....

கோபுரம்,
மூணு கால பூஜை,
புனஸ்காரம்,
கொடுப்பினை வேணும் அய்யனாரே.....

• ஸ்ரீவாரி மஞ்சு



அப்பா எப்படி இருக்கிறார் என
ஆவலோடு கேட்கும் அவரின் நண்பரிடம்
சட்டென சொல்லிவிட முடியவில்லை
அவர் இல்லை எனும் உண்மையை

• நேசன்

ஒரு குழி
கொஞ்சம் நீர்
கொஞ்சம் வியர்வை
கொஞ்சம் கவனம்
கொஞ்சம் கனவு
ஒரு விதை

விதை துளிராகும்
துளிர் செடியாகும்
செடி மரமாகும்
மரம் பூப்பூக்கும்
பூ காய் காய்க்கும்
காய் கனியாகும்
கனிதரும் மரம்
நிழல் தரும்

நாம் வளர்த்த மர நிழலில்
யாரோ ஒதுங்கட்டுமே
யாரோ வளர்த்த மர நிழலில்
நாம் ஒதுங்குவதைப் போல

ஒரு விதை என்பது
ஒரு விதையல்ல
ஒரு கையடக்க உலகம்

• ஐ.தர்மசிங்



எப்படியும்
எழுந்து விடுவாள்
என்கிற நம்பிக்கையில்
இரவு முழுதும்
பெய்து கொண்டே
இருக்கிறது மழை...!
கையில் இறுக்கிப் பிடித்த
காகிதக் கப்பலோடு
தூங்கிக் கொண்டிருக்கிறாள்
மகள்....!

• கௌ. அஸ்வின் பிரபு



## வெறுமையின் வேறு பெயர்..

வானத்தின் வெறுமைக்கு
வேறு பெயர்
வைத்துப் போகிறது
பறவை உதிர்த்த
சிறகொன்று...

எவ்வளவு நீரோடினாலும்
கூழாங்கற்களால்
அழகாகிறது நதி..

ஆரவார அலைகள்
ஆயிரமிருந்தும்,
அமைதியாய் கிடக்கும்
மணலால்
மதிப்பு கூடிப்போகிறது
கடலுக்கு..

அத்தனை எழுத்திருந்தும்
ஆயுத எழுத்தின்
மூன்று புள்ளிகளில்
முழுமையாகிறது தமிழ்....

இயற்கையில்,
ஒன்றிலிருந்து ஒன்று..
ஒன்றைச் சார்ந்ததே இன்னொன்று.
என்பதை மட்டும்
உணர்த்திபடியே
இன்னமும் சுழன்று கொண்டே–
யிருக்கிறது
பூமி..

• வினோத் பரமானந்தன்

பகலில் பரபரப்பாகயிருக்கும்
அதே சாலையில் தான்
மரத்தின் கிளைகள்
ஒன்று சேர்ந்து
ஆக்கிரமித்திருந்தது...
நிலவின் புகைப்படமாய்
இரவில்
ஓர் வித்தியாசம் தான்
வெளிச்சத்தின் தீவிரம் இப்போது
இல்லை
இரவின் கவிதையை ரசிக்க
முடிகிறது

• இரா. மதிராஜ்

மீன் பிடித்தடைக்காலம்
உள்வாங்கியது
மீனவன் வயிறு!

• நேசன் மகதி

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு புத்தக தானம் செய்வீர்...!



“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரியஎண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின்ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துசிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.”

**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**


**இலக்கிய படைப்பு குழுமம்**

3, அஜந்தா டவர்ஸ், தரைத்தனம், கார்ப்பரேஷன் காலனி தெரு.கோடம்பாக்கம், சென்னை 600 024. Ph: +91 73388 97788